


More info:
use-wisely-take-precisely.com

Antibiotics:
use wisely
take precisely.



## நுண்ணுயிர்க் கொல்லி மரு-ந்து என்றால் என்ன?

நுண்ணுயிர்க் கொ-ல்லி மருந்துகள் என்பது பாக்டீரியாவை அழிக்கும் அல்லது அதன் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் மாத்தி-ரைகளைக் குறிக்கும். அவை மனிதனுக்கு மற்றும் விலங்குகளுக்கு ஏற்படும் பாக்டீரியா தா-க்கத்தினால் ஏற்படும் நோய்களுக்கு எதி-ராக போராடும் முக்கி-ய மருத்துவ ஆயுதமே-யாகும். உதாரணமாக இரத்தத்தில் நச்சுக்க-லப்பு அல்லது நிமோனியா போன்ற நோய்களுக்கு அல்லது பலவீனமாக இருக்கும் நோயெதிர்ப்பு சக்தியை முற்பாதுகாக்கவும் பயன்படுத்தப்படுகிறது.



## நுண்ணுயிர்க் கொல்லி மரு-ந்து எதிர்ப்பு என்றால் என்ன?


பாக்டீரியாக்கள் நுண்ணு-ண்ணுயிர்க் கொல்லி மருந்திற்கு தம்மை பழக்கப்படுத்தி; நுண்ணு-யிர்க் கொல்லி மருந்தை எதிர்ப்பதற்காக தம்மை இசைவாக்கமடைய செய்கிறது. எனவே நுண்ணுயிர்க் கொ-ல்லி மருந்தானது தனது செயற்திறனை இழக்கின்றது. நுண்ணுயிர்க் கொ-ல்லி மருந்தை அடிக்கடி அல்லது தவறாக பயன்படுத்தும் போ-து இசைவாக்கம் அடையும் செயல்முறை ஊக்குவிக்கப்பட்டு துரிதப்படுத்தப்படுகிறது.

நுண்ணுயிர்க் கொல்லி மருந்தை எதிர்ப்பது மனிதரோ அல்லது விலங்குகளோ அல்ல. அதை எதிர்கொள்வது பாக்டீரியக்கள் தான். அவை விரைவில் பெருகி வேறு பாக்டீரியாக்களுக்கும் தொற்றி, அந்த பாக்டீரியாக்களுக்கும் எதிர்ப்பாற்றலைக் கொண்டு வரும்.



## எதற்கெதிராக நு-ண்ணுயிர்க் கொல்லி மரு-ந்து பயன்படுகிற-து? எதற்கெதிராக இல்லை?

நுண்ணுயிர்க் கொல்லி மருந்து மருத்துவரின் பரிந்துரைப்பின் அடிப்படையில் மட்டும் கிடைக்க கூடிய மருந்து. அவை பாக்டீரியாவின் வளர்ச்சியை கட்டுப்படுத்தும் அல்லது அவற்றை அழிக்கும். நுண்ணுயிர்க் கொல்லி மருந்து பாக்டீரியாவின் தாக்கத்துக்கு எதிராக மட்டுமே வேலை செய்யும். அவை மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் ஏற்படும் வைரஸ், பங்கஸ், ஒட்டுண்ணிகள் போன்றவைகளால் ஏற்படும் வெவ்வேறு நோய்களுக்கு எதிராக செயற்படாது. ஆகையால் நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளை பாக்டீரியா நோய்த்தொற்றுக்கு மட்டுமே பயன்படுத்தல் அவசியமாகும்.



## நுண்ணுயிர்க் கொல்லி மரு-ந்து எதிர்ப்பு எவ்வாறு ஏற்படு-கிறது?

எதிர்ப்புகள் பாரம்பரிய பாக்டீரியாவில் நடைபெ-றும் மாற்றங்களினால் அல்லது மற்ற பாக்டீரி-யாக்களுடன் எதிர்ப்பு மரபணுக்கள் சேரும்போ-தும் ஏற்படுகின்றன. ஒவ்வொரு தடவை நுண்ணுயிர்க் கொல்லி மருந்தை உட்கொள்ளும் போதும் எதிர்ப்பாற்றல் அல்லாத பாக்டீரியாக்க-ளுடன் பார்க்கும்போது எதிர்ப்பாற்றல் மிக்க பாக்டீரியாக்கள் மீண்டும் உயிர் வாழ்கின்றன. அவை தப்பிப் பிழைத்து பெருகிக்கொள்ளும். அதிகரித்த மனிதர் மற்று-ம் விலங்கு நுண்ணுயி-ர்க் கொல்லி மருந்தின் பாவனையானது பரவலாக மருந்து எதிர்ப்புக்களை துரிதப்படுத்துகிறது.



## எதற்கெதிராக நு-ண்ணுயிர்க் கொல்லி மருந்து பயன்படுகி-றது? எதற்கெதிராக இல்லை?

நுண்ணுயிர்க் கொல்லி மருந்து மருத்துவரின் பரிந்துரைப்பின் அடிப்படையி-ல் மட்டும் கிடைக்க கூடிய மருந்து. அவை பாக்டீரியாவின் வளர்ச்சியை கட்டுப்படுத்தும் அல்லது அவற்றை அழிக்கும். நுண்ணுயிர்க் கொல்லி மரு-ந்து பாக்டீரியாவின் தாக்கத்து-க்கு எதிராக மட்டுமே வேலை செய்யும். அவை மனிதர்களு-க்கும் விலங்குகளுக்கும் ஏற்படும் வைரஸ், பங்கஸ், ஒட்டுண்ணிகள் போன்றவை-களால் ஏற்படும் வெவ்வேறு நோய்களுக்கு எதிராக செயற்படாது. ஆகையால் நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளை பாக்டீரியா நோய்த்தொற்றுக்கு மட்டுமே பயன்படுத்தல் அவசியமாகும்.





## ஒன்றையும் தவற விட்டுவிடாதீர்கள்.

மருந்தை உட்கொள்ள மறந்தால் நோய்த்தொற்று நீடிக்கும், அத்துடன் இச் சிகிச்சை முறை எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும். உங்களுக்கு பக்க விளைவு-கள் ஏற்பட்டிருக்கும் பட்சத்தில், அதன் காரணமாக சிகி-ச்சையை இடை நிறுத்த விரும்பினால், உடனே உங்கள் வைத்தியரை அல்லது மருந்தாளரை நாடுங்கள்.



## நான் நுண்ணுயி-ர்க் கொல்லி மருந்தை எப்படி பயன்படுத்துவது?

உங்களிடம் நுண்ணுயிர்க் கொல்லி மருந்தை எப்படி உட் கொள்வது என கேள்விகள் அல்லது நிச்சயமற்ற தன்மை இருக்குமானால், அல்லது நுண்ணுயிர்க் கொல்லி மருந்தை எடுக்க மறந்திருந்தால் உங்கள் வைத்தியரை அல்லது மருந்தாளரை அணுகுங்கள். பாக்டீரியாவால் வரும் எல்லாவித நோய்களுக்கும் நுண்ணுயிர்க் கொல்லி மருந்தால் சிகிச்சை அளிக்க முடியாது. எனவே உடலில் உள்ள இயல்பான பாதுகாப்பு, எடுத்துக்காட்டாக அதிக சிறுநீர்ப்பைத் தொற்று, காதுத்தொற்று என்பவற்றை நுண்ணுயிர்க் கொல்லி மருந்து உதவி இல்லாமலே குணமடைய செய்கிறது.




## நுண்ணுயிர்க் கொல்லி மருந்தை மற்றவர்களு-டன் பகிர்ந்து கொள்ளாதீர்கள்.

உங்களுக்கு பரிந்துரை-க்க-ப்பட்ட நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளாதீர்கள். இவை உங்களுக்காக, அதாவது உங்கள் சுய தேவைக்கேற்ற-வாறு மட்டுமே, சிகிச்சை அளிக்க பரிந்துரைக்க-ப்பட்டுள்ளது.



## திறந்த பெட்டிகளை மீண்டும் கொண்டு வாருங்கள்.

நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளை ஒரு போதும.
வீட்டுக் குப்பையோடு சேர்த்து போடாதீர்கள்.
சுற்றுச் சூழலுக்குள் (உதாரணமாக கழிவுநீரு-க்குள்) கலந்து விடாதீர்கள். வேறு நோய்களுக்கு பயன்படுத்துவதற்காக நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளை சேமித்து வைக்காதீர்கள்.



## சமைக்கும் போது எச்சரிக்கையாக இருத்தல்

உணவுப் பொருட்களில் கூட நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகள் எதிர்ப்பு பாக்டீரியாக்களை தொற்றவைக்கும் தன்மை உண்டு. ஆனாலும் அவற்றை எளிய வழி முறைகளால் குறைக்கலாம்.



## நுண்ணுயிர்க் கொல்லி மருந்தை-அன்டிபயாட்டிக்கை பரிந்துரைத்தபடி அப்படியே பயன்படு-த்த வேண்டும

அதை தவறாக உட்கொண்டால் எதிர்விளைவுகளை ஏற்படு-த்தும். எதிர்ப்பாற்றல் மிக்க பாக்டீரியாக்களுக்கு எதிராக, ஏற்கனவே உள்கொள்ளப்பட்ட அன்டியாட்டிக்குகள், இனி வே-லை செய்யாது. உங்கள் வை-த்தியர் பரிந்துரைத்த அள-வையும், சிகிச்சைக் காலத்தை-யும், அப்படியே தவறாமல் கடைப்பிடியுங்கள். உங்க-ளுக்கென்றே பிரத்தியேகமாக பரிந்துரைக்கப்படும், உங்கள் அன்டிபயாட்டிக்கின் அளவு, உகந்த பலனை உங்களுக்கு வழங்குவது உத்தரவாதம். ஓரி-ரு நாட்களில் முன்னேற்றம் அடைவதை நீங்கள் உணர்ந்தா-லும் முற்கூட்டியே சிகிச்சை-யை இடை நிறுத்தி விடாதீர்கள்.

## நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகள்: முறையாக பயன்படுத்துதல், முக்கியம்.

நாம் ஒன்றிணைந்து நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகள் எதிர்ப்பாற்றலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கலாம். இந்த இணையத்தளத்தில் https://www.antibiotika-richtig-einsetzen.ch/ta இந்த விடயம் பற்றிய மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். உங்கள் குடும்ப வைத்தியரிடம் அல்லது மருந்தகத்திலும் இவை பற்றி வினவலாம்.

நன்றி!





## விலங்குகளில் இருந்து மனிதனுக்கும் மற்றும் நேர்மாறாக.

விலங்கினமும் மனிதர்களும் தங்களுக்குள் எதிர்ப்பு பாக்டீரியாவை கடத்துகின்றனர். இதில் உணவுப்பொருட்களும் ஒரு பங்கு வகிக்கின்றன.




## சுற்றுச்சூழலும் பாதிக்கப்ப-ட்டுள்ளது.

நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகள் எதிர்ப்பு சுற்றுச் சூழலையும் அதேவேளை மனிதமருத்துவம், விலங்குமருத்துவம், விவசாயம், உணவுப்பொரு-ட்கள் மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு போன்றவற்றை சிக்கலுக்கு உள்ளாக்கி விட்டுள்ளது. எல்லாப் பிரிவுகளிலும் அதிகரிக்கும் எதிர்ப்புக்கள் சுகாதாரக் கொள்கைகளுக்கு சவாலாகவே உள்ளது. மேலும் இந்த சவால்களை நாம் ஒன்றாகவே வெற்றிகரமாக எதிர்க்கொள்ள முடியும்.



## விலங்குகளுக்கும் அதை சரியாக பயன்படுத்துவது முக்கியம்.

மனிதரும் விலங்குகளும் அத்தியாவசிய தேவை ஏற்படும் போது மட்டுமே நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளை உட் கொள்ளல் வேண்டும். தேவையான அளவும் முடிந்த அளவு குறைவாகவும்.



## இணைந்து பொறுப்பை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

விலங்குகள் வைத்திருப்ப-வர்களும் கால்நடை மருத்துவரும் இணைந்து விலங்குகளுக்கு நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகள் கொடுப்பதை பொறுப்புணர்வோடு கையாள வேண்டும். எல்லோரும் இணைந்து செயற்படுவது எம் விலங்குகளுக்கு சிறந்தது.



## நான் வெளிநா-ட்டுக்கு பயணி-க்கும் போது எவற்றை தெரிந்து கொள்ளல் வே-ண்டும்?

சில நாடுகளில் நுண்ணு-யிர்க் கொல்லி மருந்துகள் எதிர்ப்புப் பிரச்சனை சுவிஸை விட மேலோ-ங்கியுள்ளது. ஒருவர் வெளிநாட்டில் நோய்வா-ய்ப்பட்டு வைத்தியசாலையில் இருந்து சிகிச்சை பெற்றிருந்தால் திரும்பி நாட்டுக்கு வரும்போது நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளை எதிர்க்கும் பக்டீரியாக்களை உடன் கொண்டு வரலாம். அந்நபர் சுவிஸுக்கு திரும்பி வந்த 12 மாதங்களுக்குள் மருத்துவமனையில் தங்கி சகிச்சை பெற நேர்ந்தால், தான் வெளிநாட்டு மருத்துவமனையில் இருந்து சிகிச்சை பெற்றதை மருத்துவ ஊழியர்களிடம் அறிவிக்க வேண்டும். ஆரம்பத்தி-லேயே பாக்டீரியாவின் எதிர்ப்பாற்றலைக் கண்டறிந்தால் அதை பரவவிடாமல் தடுத்து மருத்துவ சிகிச்சையினை எளிதாக்கலாம்.

மனிதரும் விலங்குகளும் நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளின் பயன்பா-ட்டினை பெறுவதற்காக அவற்றை முறையாக பயன்படுத்தல் அவசியம்.



# நுண்ணுயி-ர்க் கொல்லி மருந்துகளின் எதிர்ப்பாற்றல்: சரியா அல்ல-து பிழையா?

நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகள் பயன்பாடு பற்றிய சரியான விடைகள்

## நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளை உட்கொள்பவர் எதிர்ப்பு சக்தியைப் பெறுவார். சரி அல்லது பிழை?

பிழை: எதிர்ப்பது ஒரு நபராக இருக்கமாட்டார் எதிர்ப்பாளர் பாக்டீரியாவே. எதிர்ப்பு பாக்டீரியாக்கள் பெருகி ஒரு நபரிடமிருந்து மற்றொரு நபருக்கும் அல்லது மனிதர்களிடமிருந்து விலங்குகளுக்கும் பரப்பப்படுகிறது. அவை

கிருமித்தொற்று சிகி-ச்சையை கடினமாக்கும், நீடிக்கும் அல்லது மிக மோசமான நிலையாக சிகிச்சையை பயனற்றதாக செய்துவிடும் .

## அன்டிபயாட்டிக் காய்ச்சல் மற்றும் தடிமனுக்கு பயனளிக்கும் சரி அல்லது பிழை?

பிழை: நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகள் வைரஸ்களுக்கு எதிராக பயனளிக்காது. தடிமன் மற்றும் காய்ச்சல் போன்றவை வைரஸ்களால் ஏற்படுபவை. அவசியமில்லாமல் நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளை

## அவசியமில்லாமல் நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளை உட்கொள்வது பயனற்றது. சரி அல்லது பிழை?

சரி: அன்டிபயாட்டிக் ஒரு ஆயுதம், அதை அடிக்கடி பாவித்தால் அதன் செய-
ற்பாடு மந்தமாகிவிடும். ஒவ்வொருமுறை நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளை பாவிக்கும் போது எதிர்ப்பு பாக்டீரியா-
க்கள் பெருகும், மற்றை-
ய பாக்டீரியாக்கள் அழிவ-
தை அவை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் தங்களுக்கென ஒரு இடத்தை பிடிக்கும்.

## நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகள் வைரஸ்களை அழிக்கின்றன. சரி அல்லது பிழை?

பிழை: நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளுக்கு மருத்துவர் பரிந்துரை அவசியம், அவை பாக்டீரியாவின் வளர்ச்சியை கட்டுப்படுத்தும் அல்லது அழிக்கும். நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகள் வைரஸால் ஏற்படும் தொற்றுக்களை குணமாக்காது. உதாரணமாக காய்ச்சல், தடிமன், சத்தி மற்றும் வயிற்றோட்டம் பூஞ்சண நோய்கள் மற்றும் மலேரியா.

## நுண்ணுயி-ர்க் கொல்லி மருந்துகள் தண்ணருக்கு-ள்ளும் கலக்கி-ன்றன. சரி அல்லது பிழை? தண்ணீ-ரு-க்குள்ளும் கலக்கின்றன. சரி அல்லது பிழை?

சரி: நம் உடலில் நுண்ணுயிர் எதிரிகள் அழிக்கப்படுவதில்லை. நம் உடற்கூற்றில் நடைபெறும் இரசாயனண மாற்றத்தால் வெளியேற்றப்படும் கழிவானது கழிவறையூடாக கழிவு நீருக்குள் செல்கின்றது. சுத்திகரிப்பு ஆலையாலும் அதை சுத்திகரிக்கப்படாமல் அவை நேரடியாக கழிவுநீருக்குள் கலக்கின்றன.

## நுண்ணுயிர்க் கொல்லி மருந்து-கள் கழிவுநீரில் கலக்கும் போது சூழல் மாசடைகிறது. சரி அல்லது பிழை?

சரி: நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகள் உயிரியல் ரீதியாக தீவிரமான பொருட்கள். உங்கள் நோய்க்கேற்ப அவை உங்களுக்கு பயன்படுவது போல் கழிவுநீரில் கலந்து மற்ற உயிரினங்களுக்கும் செயற்படும். சேர்க்கைகளால் ஏற்படும் இரசாயன கழிவுகள் நகராட்சி கழிவு நீருடன் கலந்து மீன்கள் மற்றும் நீர் வாழ் உயிரினங்களை பாதிக்கின்றது.

## சுவிஸில் கால்நடைகளுக்கு அன்டிபயாட்டிக் கொடுத்து வளர்ச்சியடைய செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. சரி அல்லது பிழை?

சரி: சுவிஸில் 1999 இல் இருந்து கால்நடைமருந்து மூலம் நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளைக் கொடுத்து கால்நடைகளை வளர்ச்சியடைய செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. இத்தடையானது 2006 இல் இருந்து ஐரோப்பிய ஒன்றியத்திலும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

Antibiotics: use wisely take precisely.

## Links

www.richtig-ist-wichtig.ch
www.quand-il-faut-comme-il-faut.ch
www.quando-serve-quanto-serve.ch

www.antibiotika-richtig-einsetzen.ch/ta

www.star.admin.ch

## தொடர்புகட்கு

உங்களிடம் நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகள் பற்றிய அல்லது நுண்ணுயிர் எதிரிகளுக்கான எதிர்ப்பு பற்றிய வினாக்கள் தோன்றினால் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் நிலையங்களை அணுகுங்கள்.எனினும் இந்த நிலையத்தின் மூலம் தனிப்பட்ட மருத்துவ தகவல்களை பெற்றுக்கொள்ள முடியாது என்பதனை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் ஆரோக்கியம் அதாவது நோய் பற்றிய வினாக்கள் அல்லது நுண்ணு-யிர்க் கோல்லி மருந்துகளை எப்படி பயன்படுத்துவது  போன்ற உங்கள் தனிப்பட்ட கேள்விகளுக்கு உங்கள் வைத்தியரை, கால்நடை வைத்தியரை அல்லது மருந்தாளரை நாடுங்கள்.

- நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகள் அல்லது நுண்ணுயிர் எதிரிகளுக்கான எதிர்ப்பு, மற்றும் மனிதர் உட்கொள்ளும் மருந்துகள் பற்றிய வினாக்களுக்கு: தகவல் இலக்கம்,நுண்ணுயிர் எதிரிகளுக்கான எதி-ர்ப்பு  058 467 64 31 oder கூட்டாட்சி சுகாதார அமைச்சு (BAG) info@bag.admin.ch
- நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகள் அல்லது நுண்ணுயிர் எதிரிகளுக்கான எதிர்ப்பு, விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு பற்றிய கேள்விகளுக்கு: கூட்டாட்சி விவசாய அமைச்சு (BLW),  info@blw.admin.ch
- நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகள் அல்லது நுண்ணுயிர் எதிரிகளுக்கான எதிர்ப்பு, கால்நடை அல்லது கால்நடை மருத்துவர் பற்றிய கேள்விகளுக்கு: கூட்டாட்சி உணவுப்பாதுகாப்பு மற்றும் கால்நடை அமைச்சு  (BLV), 058 463 30 33 oder info@blv.admin.ch
- நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகள் அல்லது நுண்ணுயிர் எதிரிகளுக்கான எதிர்ப்பு , சுற்றுச்சூழல் பற்றிய வினாக்களுக்கு: கூட்டாட்சி சுற்றுச்சூழல் அமைச்சு (BAFU), 058 462 93 11 oder info@bafu.admin.ch

